# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 17.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.SA4122/F/2019**

திரு J. ஜான் ஆலிவர் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/விநியோகம்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குழித்துறை,
நாகர்கோவில். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 24.01.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 19.03.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 03.05.2019 |

******

## ஆணை

இன்று (17.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு J. ஜான் ஆலிவர் ஆஜராகவில்லை. 13.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனவும், விசாரணையை வேறொரு நாளுக்கு மாற்றித்தரவும் கேட்டுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு M.R.பத்மகுமார், செயற்பொறியாளர்/ விநியோகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், குழித்துறை, நாகர்கோவில் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 24.01.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டத்தில் பஞ்சாயத்து காசோலைகளில் பஞ்சாயத்து அல்லாத மின் நுகர்வோருக்கான மின் கட்டணம் மற்றும் நிலுவை தொகை வசூல் செய்த கணக்கீட்டாளர், கணக்கீட்டு ஆய்வாளர் மற்றும் வருவாய் மேற்பார்வையாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தனித்தனியாக வசூல் செய்த மின் இணைப்பு எண், தொகைகளின் விவரம் மற்றும் அவர்கள் எந்தெந்த அலுவலகத்தில் பணிபுரிகின்றனர் என்ற விவரம் மற்றும் கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட அனைத்து அலுவலகங்களிலும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகங்களின் பெயர் போன்ற தகவல்களை வழங்கக் கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்ட அலுவலகம், நாகர்கோவில் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை அளிக்கவும் கேட்டு, 19.03.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்கவில்லை என்றும், தகவல் வழங்காத அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், பிரிவு 19(3)ன் கீழ் 03.05.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக 28.03.2019, 03.04.2019 மற்றும் 13.09.2019 தேதியிட்டு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணையில் ஆஜராகாத நிலையில், அவரது கோரிக்கையை ஆணையம் ஏற்று, இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகிறது. அன்றைய தினம் மேல்முறையீட்டாளரும், உரிய பொதுத் தகவல் அலுவலரும் தவறாமல் ஆஜராகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அன்றைய தினமும் மேல்முறையீட்டாளர் ஆஜராகத் தவறும் பட்சம், மேல்முறையீட்டாளருக்கு இவ்வழக்கின் மேல் எவ்வித அக்கறையும் இல்லை என ஆணையம் கருதி, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மறுவிசாரணை தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA4122/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/விநியோகம்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குழித்துறை, நாகர்கோவில்.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு J. ஜான் ஆலிவர்,
எண்.6-10, தோப்புவிளை,
வெற்றிலைக்கோட்டை,
கருங்கல் அஞ்சல் - 629 157
கன்னியாகுமரி மாவட்டம்.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS - 190919**